தரம் 12

முதலாம் தவணை

தமிழ்



# சங்க கால தெய்வங்கள், அரசர்கள், புலவர்கள்

Mrs. S.Kanagambal (BA)

CP/K/Sri Ramakrishna National College, Galaha

# சங்ககால தெய்வங்கள்





சரியாயின் சரி (✓) எனவும் பிழையாயின் பிழை (✖) எனவும் அடையாளமிடுக.

1. சங்க காலத்தில் ஒரு தெய்வ வழிப்பாடு அன்றி பல தெய்வ வழிப்பாடு காணப்பட்டது. ( )

**விடை – சரி (✓)**

2. சங்க காலத்தில் அவைதீக சமயங்கள் பெரிதும் போற்றப்பட்டன.

( )

விடை – பிழை (✖)

3. பேய், பூதம்,யமன் போன்ற அச்சத்தை தருகின்ற தெய்வ வழிப்பாடு சங்ககாலத்தில் காணப்பட்டது.

(  )

விடை – சரி ( ✓ )

4. சங்ககால மக்கள் இயற்கையை வணங்கவில்லை

( )

விடை – பிழை ( ✖)

5. மக்கள் வாழுகின்ற நிலத்தின் இயல்புக்கேற்ப தெய்வங்கள் முதன்மை பெற்றன. ( )

விடை – சரி ( ✓ )

## பின்வரும் நிலங்களுக்கு ஏற்ப தெய்வங்களை இனங்கண்டு இணைக்குக.

1. குறிஞ்சி
2. மருதம்
3. நெய்தல்
4. முல்லை
5. பாலை

- வருணன்
- கொற்றவை
- திருமால்
- இந்திரன்
- முருகன்

# விடை

1. குறிஞ்சி
2. மருதம்
3. நெய்தல்
4. முல்லை
5. பாலை

- வருணன்
- கொற்றவை
- திருமால்
- இந்திரன்
- முருகன்

## பல்தேர்வு வினா
## மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க

திருமுருகாற்றுப்படையில் பேசப்படும் இறைவன்

1. திருமால்
2. முருகன்
3. கொற்றவை
4. வருணன்

**விடை – முருகன்**

2. சங்க காலத்தில் இறந்தவர்களை புதைத்த இடத்தில் நடப்பட்ட கல்லை வழிப்படுகின்ற முறை

1 நடுகல் வழிபாடு
2. வேலவன் வெறியாடல்
3. சமாதி வழிபாடு
4. கல்லறை வழிபாடு

**விடை – நடுகல் வழிபாடு**

3. ஆதிரையான், ஆலமலர் செல்வன், ஈசன், தாழ்சடைப்பெரியோன் என அழைக்கப்படும் இறைவன்

1. திருமால்
2. விநாயகர்
3. வீரபத்திரர்
4. சிவன்

**விடை – சிவன்**

4. “பிணம் தின் யாக்கைப் பேய்மகள் துவன்றவும்...” (வரி- 260) என்ற பாடல் இடம் பெறும் சங்கநூல்

1. குறுந்தொகை
2. பட்டினப்பாலை
3. கலித்தொகை
4. பரிபாடல்

விடை – பட்டினப்பாலை

6. “துணங்கையம் செல்லிக்கு அணங்கு நொடித்தாங்கு..” (பெரும்பாணாற்றுப்படை – அடி459)

இங்கு அணங்கு என்பதன் பொருள்

1. பேய்
2. தலைவி
3. சேய்
4. மிருகம்

**விடை – பேய்**

7. பொன், வெள்ளி, இரும்பு மதில்களை கொண்ட நகரங்களில் வாழ்ந்த 3 அரக்கர்களை சிவபெருமான் எரித்த புராணம் கூறப்படும் சங்க இலக்கியம்

1. நெடுநல்வாடை
2. கலித்தொகை
3. பரிபாடல்
4. பட்டினப்பாலை

**விடை – பரிபாடல்**

**(மூவகை ஆரெயில் ஓர் அழல்……பரி 5,25-27)**

8. சங்க மக்களால் முருகனுக்கு செய்யப்பட்ட வழிப்பாடு

1. நடுகல்
2. ஊர்வீதி வருகை
3. வேலவன் ஆட்டம்
4. வேலவன் வெறியாடல்

விடை – வேலவன் வெறியாடல்

# சங்ககால அரசர்களும் புலவர்களும்





**சங்ககால அரசர்கள் பற்றிய தகவல்களில் பொருத்தமற்ற கூற்றாக அமைவது**

1. சேர சோழ பாண்டியன் ஆகிய மூவேந்தர்கள் ஆட்சி செய்தனர்.
2. குறுநில மன்னர்களும் ஆட்சி செய்தனர்.
3. மன்னர்களில் சிலர் வடநாட்டிலிருந்து வந்தவர்களாக காணப்பட்டனர்.
4. பாரி அதியமான் பேகன் போன்றவர்களும் சங்ககால மன்னர்களாவார்கள்.

விடை - 3. மன்னர்களில் சிலர் வடநாட்டிலிருந்து வந்தவர்களாக காணப்பட்டனர்.

2. சங்கப்புலவர்கள் பற்றி மிகச் சரியான கருத்து

1. 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' எனும் பரந்த மனப்பாங்கில் புலவர்கள் வாழ்ந்தனர்.
2. பரிசுக்காக பொய் கூறி புலவர்கள் வாழ்த்துப்பாடுபவர்களாக காணப்பட்டனர்.
3. இக்கால புலவர்கள் பெரும்பாலும் வசைக்கவி பாடுபவர்களாகக் காணப்பட்டனர்.
4. அரசர்களின் சொத்துக்களை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தனர்.

விடை - 1. 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' எனும் பரந்த மனப்பாங்கில் புலவர்கள் வாழ்ந்தனர்.

3. பின்வருவோரில் சங்கபுலவர்களுள் உள்ளடங்கப்படாதவர்கள்

1. ஈழத்துப் பூதந்தேவனார், பெருவழுதி, அதியமான் காக்கை பாடினியார்

2. பெருஞ்சாத்தனார், கபிலர், மாங்குடி மருதனார், வெள்ளைக்குடி நாகனார்

3. பூங்குன்றனார், பரணர், இறையனார், ஓதலாந்தையார்

4. புகழேந்தி, அதிவீரராம பண்டிதர், கம்பர், ஒட்டக்கூத்தர்

விடை - 4. புகழேந்தி, அதிவீரராம பண்டிதர், கம்பர், ஒட்டக்கூத்தர்

5. சங்கப்புலவர்களின் இயற்கை ஈடுபாட்டை புலப்படுத்தாத கூற்றாக அமைவது

1. புலவர்கள் அணிகளை கைளாள்வதற்கு இயற்கையை பயன்படுத்தவில்லை.

2. இயற்கையோடு இணைந்து முதற்பொருளாக மக்களையும் துணைப்பொருளாக இயற்கையையும் பாடினார்கள்.

3. இயற்கையோடிணைந்த பெரும்பொழுது சிறுபொழுதுகளும் பேசுபொருளாக்கப்பட்டமை

4. எடுத்துக்காட்டுகளை பெறுவதற்கு இயற்கையை கையாண்டனர்.

**விடை - 1. புலவர்கள் அணிகளை கைளாள்வதற்கு இயற்கையை பயன்படுத்தவில்லை.**

## பின்வரும் நிகழ்வுகளுடன் சம்பந்தமானவர்களை குறிப்பிடுக.

1. மயிலுக்கு போர்வை அளித்தமை
2. முல்லைக்கு தேர் கொடுத்தமை
3. புறாவுக்காக தன் தசையை வெட்டி கொடுத்தமை
4. ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்தமை

- பேகன்
- பாரி
- சிபி
- அதியமான்

- 4. தன் தம்பியால் நாடிழந்து காட்டில் வாழ்ந் போதும் புலவருக்காக தன் தலையை கொடுக்க முற்பட்டமை
- 5. குடும்ப வாழ்வில் மனைவி பிரிந்து சிக்கல் ஏற்பட்ட போது கபிலர் பரணர் போன்றோர் சமாதானம் வேண்டியமை

- குமணன்
- பேகன்

## பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளி நிரப்புவோம்

1. சங்க காலத்தில் சுமார் ..................மேற்பட்ட புலவர்கள் வாழ்ந்தார்கள்

விடை – நானூறு

2. புறத்திணை இலக்கியச் செய்யுள் பெரும்பாலானவை .............................. மரபில் உள்ளவை ஆகும்.

**விடை – பாடாண்திணை**

3. மூவேந்தர்கள் தம்குள்ளும் …………….. மன்னர்களுடனும் அடிக்கடி போர்களிலும் உட்பூசல்களிலும் ஈடுபட்டனர்.

**விடை – குறுநில**

4. குமணன் தன் நாடிழந்து காட்டில் வாழ்ந்த போது ………………….. எனும் புலவர் குமணனையும் அவனது தம்பி இளங்குமணனையும் சேர்த்து வைத்தமை

**விடை – பெருந்தலைச்சாத்தன்**




நன்றி